யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 08
## First Term Examination – 2020 – Grade 08

| | | | | |
|---|---|---|---|---|
| சைவசமயம் | 12 | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours |
| சுட்டெண் Index No | | | | சைவசமயம் |

பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

01. தொப்பை அப்பனை தொழ வினை அறுமே. இங்கு தொப்பை அப்பன் எனப்படுபவர்
    1. முருகன் 2. பிள்ளையார் 3. வைரவர் 4. விஸ்னு

02. பஞ்ச கிருத்தியங்களுள் அடங்காதது
    1. படைத்தல் 2. காத்தல் 3. அருளல் 4. இருத்தல்

03. ஆன்மா என்று அழைக்கப்படுவது
    1. பாசம் 2. பதி 3. ஆணவம் 4. பசு

04. மார்பினைக்குறிக்கும் மண்டபமாக அமைவது
    1. மகாமண்டபம் 2.. அர்த்த மண்டபம் 3. கருவறை 4. மடம்

05. பிரபஞ்ச இயக்கத்தை விளக்குவது
    1. நந்தி 2. பலிபீடம் 3. கோபுரம் 4. சண்டேஸ்வரர்

06. இருவாரங்களுக்கு ஒருமுறை அனுட்டிக்கப்படும் விரதம்
    1. பிரதோசம் 2. சிவராத்திரி 3. மகாமகம் 4. நவராத்திரி

07. “கோயில்” எனச்சிறப்பிக்கப்படும் தலம்
    1. கேதீஸ்வரம் 2. கோணேஸ்வரம் 3. சிதம்பரம் 4. திருத்தணிகை

08. “கற்றாங்கு எரியோம்பி…” என்னும் பாடலைப் பாடியவர்
    1. அப்பர் 2. சுந்தரர் 3. சம்பந்தர் 4. தாயுமானவர்

09. “மண்ணில் நல்ல வண்ணம்…” பாடல் பாடிய தலம்
    1. திருக்கழுமலம் 2. திருவீழிமிழலை 3. சிதம்பரம் 4. கீரிமலை

10. ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவான நமஸ்காரம்
    1. திரியாங்கம் 2. அட்டாங்கம் 3. யோகாங்கம் 4. நமஸ்காரம்

11. “உழவாரப்படையாளி” என அழைக்கப்படுபவர்
    1. சம்பந்தர் 2. கண்ணப்பர் 3. சுந்தரர் 4. மருணீக்கியார்

12. உத்தாலகரின் மகன்
    1. உபமன்யு 2. நசிகேதன் 3. இந்திரன் 4. சுவேதகேது



kalvi.lk

13. மருத்து நீர் வைத்து நீராடும் பண்டிகை
   1. வருடப்பிறப்பு 2. ஆடிப்பிறப்பு 3. தைப் பொங்கல் 4. தீபாவளி

14. கந்த புராணம் பாடியவர்
   1. சேந்தனார் 2. சேக்கிழார் 3. அருணகிரிநாதர் 4. கச்சியப்பர்

15. அன்னப் பட்சி வடிவில் சென்று ஒளிப்பிளம்பின் முடியைக் காணச் சென்றவர்
   1. விஸ்ணு 2. பிரம்மா 3. உருத்திரன் 4. இலிங்கோற்பவர்

16. சிவன் இலிங்கோற்பவ மூர்த்தியாக வெளிப்பட்ட தினம்
   1. சிவராத்திரி 2. நவராத்திரி 3. தைப்பூசம் 4. பங்குனி உத்தரம்

17. கோயிலுக்குச் செல்ல முன் தெரிவது
   1. கோபுரம் 2. மகாமண்டபம் 3. நிருத்தமண்டபம் 4. கொடித்தம்பம்

18. சரியை வழியில் நின்று இறைவனை வழிபட்டவர்
   1. சுந்தரர் 2. அப்பர் 3. சம்பந்தர் 4. நாவலர்

19. "மண்ணில் நல்ல வண்ணம்..." என்ற பாடலைப் பாடிய தலம்
   1. திருக்கழுமலம் 2. திருமருகல் 3. சீர்காழி 4. திருப்பெருந்துறை

20. வாரம் ஒரு முறை அனுட்டிக்கும் விரதமாக அமைவது
   1. பிரதோசம் 2. சதுர்த்தி 3. சோமவாரம் 4. மகாமகம்

(40 புள்ளிகள்)

**பகுதி - II**

**முதலாம், இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் திருமுறைப்பாடல்களில் ஒன்றினை வரிக்கிரமமாக எழுதி பாடியவர், பண் என்பனவற்றைக் குறிப்பிடுக.
   1. கைப்போது மலர்….
   2. கற்றாங்கு எரியோம்பி…..
   3. மண்ணில் நல்ல வண்ணம்
   4. பெருகலாம்தவம் பேதைமை….

(10 புள்ளிகள்)

02. சுருக்கமான விடை தருக
   1. கடவுளின் உண்மைத்தன்மையை கூறும் உபநிடதம் யாது?
   2. மும்மலங்களும் எவை?
   3. ஆலயத்தில் காணப்படும் மண்டபங்கள் நான்கு தருக?
   4. மூலஸ்தானத்தினை வேறு எப்பெயரால் அழைப்பர்?
   5. நமஸ்காரங்கள் மூன்றினையும் தருக?
   6. பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை நோற்கும் விரதம் யாது?
   7. எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காது செய்யும் பூசை எது?
   8. திரிகரணங்களாவன எவை?
   9. கொடித்தம்பத்தை அடுத்துக்காணப்படுவது எது?
   10. ஆலயத்தில் இறுதியாக வழிபடும் கடவுளின் பெயர் யாது?

(10 x 2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

03. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்

1. ஆலயம் என்பதன் பொருள் என்ன?
2. ஆலயத்தில் நடைபெறும் கிரியைகள் மூன்று தருக?
3. காமியக் கிரியை என்றால் என்ன?
4. ஆலயத்திற்கு கொண்டு செல்லும் பூசைத்திரவியங்கள் யாவை?

(10 புள்ளிகள்)

04. கடவுள் எங்கும் நிறைந்துள்ளார்

1. கடவுளின் தன்மைகள் மூன்று தருக?
2. இறைவனின் பஞ்ச கிருத்தியங்களும் எவை?
3. கடவுளின் உண்மைத்தன்மையைப்பற்றிக் கூறும் நூல்கள் இரண்டு தருக?
4. கண்ணுக்குப்புலப்படாத கடவுளிலிருந்து இந்த இந்த உலகம் தோன்றியது என்பதை உத்தாலகர் எவ்வாறு விளக்கியுள்ளார்?

(10 புள்ளிகள்)

05. சிவராத்திரியும் வாழ்வியற் சடங்குகளும்

1. நாள் மங்கலம் என்பதன் பொருள் யாது?
2. சிவராத்திரி தினத்தில் சிவனை வழிபட்டு பேறுபெற்றவர் யாவர்?
3. சிவராத்திரி எத்தனை வகைப்படும் அவை எவை?
4. பிரமா, விஸ்ணு இருவரும் ஒலிப்பிளம்பின் அடிமுடியைக்காண எடுத்த வடிவங்கள் எவை?

(10 புள்ளிகள்)

06. "செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய"

1. கோயில் என்று சிறப்பாக கூறப்படும் தலம் எது?
2. "கற்றாங்கு எரியோம்பி…." என்ற பாடலில் பாவங்கள் யாரைப் பற்றாது என்று கூறப்பட்டுள்ளது?
3. திருக்கழுமலத்தில் இறைவனும் இறைவியும் எப்பெயரோடு வீற்றிருக்கின்றார்கள்?
4. ஆளுடைய பிள்ளை மதுரைக்கு வந்த காரணம் யாது?

(10 புள்ளிகள்)

07. இறைவன் தன்னலமற்ற அன்புக்கு அடிமையானவர்

1. திண்ணனார் இறைவனுக்குரிய இறைச்சியை எவ்வாறு தயார் செய்தார்?
2. கண்ணப்பர் இறைவன் மீது கொண்ட அன்பினை வியந்து நாவுக்கரசர் பாடிய பாடலின் அடி யாது?
3. திண்ணனாரின் பெற்றோர் யாவர்? தோழர்கள் யாவர்?
4. "மாறிலாய் என் வலத்தில் நிற்க" என்ற அடியின் பொருள் யாது?

(10 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page